தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். நம் கைகளினால் நாம் செய்த பாவத்திற்காய் அவர் கைகளில் ஆணிகள் கடாவப்பட்டது. நம் கால்களினால் செய்த பாவத்திற்காய் அவர் கால்களில் ஆணிகள் கடாவப்பட்டது. நம் சரீரத்தினால் செய்த பாவத்திற்காய் அவர் சரீரம் கிழிக்கப்பட்டது. அந்த இயேசு கிறிஸ்து உன்னை பார்த்து கேட்கிறார் மகனே எனக்காக நீ இந்த பழக்கவழக்கங்களை விடுவயா என்று? உனக்காகவும், எனக்காகவும் தன் ஜீவனையே தந்த அந்த இயேசு கிறிஸ்து தான் மெய்யான தெய்வம்.

அந்த மெய்யான தெய்வம் உன் இருதயத்துக்குள்ளே வந்துவிட்டால் இனி உன் இருதயத்துக்குள்ளே பாவம் ஆளுகை செய்ய முடியாது. ஒரு தகப்பனை போல உன்னை நேசிக்கிற அந்த இயேசு கிறிஸ்து விடம் உன் இளமையை ஒப்புக்கொடுப்பாயா. உன் இருதயத்தில் அவரை நினைத்துக்கொண்டு இந்த பாவ பழக்கவழக்கத்தில் இருந்து விடுதலை பெற விரும்புகிறேன் உதவி செய்யுங்க அப்பானு சொல்லுவாயா. இதை எழுதிக்கொண்டிருக்கிற நான் கூட உன்னை மாதிரியே ஒரு நாள் இப்படிப்பட்ட பாவத்தில் விழுந்து கிடந்தேன். நான் உனக்கு அறிமுகப்படுத்தின இயேசு என் உள்ளத்தில் வந்த பின்னர் நான் விடுதலை பெற்றேன். இப்பொழுது நீயும் இந்த பாவ பழக்கவழக்கத்தில் இருந்து விடுதலை பெற உண்மையாய் அந்த இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் நினைத்துக்கொண்டு பின் வரும் ஜெபத்தை வாசி அவர் உன்னை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார்.

## ஜெபம்:

அன்புள்ள தகப்பனே எனக்காய் நீங்க ஜீவனை தந்தீங்களே அப்பா. இந்த பாவ பழக்கத்தில் இருந்து விடுதலை பெற விரும்புகிறேன் அப்பா. எனக்கு உதவி செய்யுங்க அப்பா. இனி நீங்க விரும்புகிற படி நான்வாழ என்னை அர்ப்பணிக்கின்றேன். நீர் மாத்திரமே மெய்யான தெய்வம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன். ஆமென்.

***


*For Contact*

END TIME WARRIORS

Cell: 7667995892

Email-endtimewarriors17@gmail.com



*Diocesan Offset Press, Palayamkottai. Ph : 0462 2573182*


# Pornography

இதை வாசிக்கிற அருமையான சகோதரனே/சகோதரியே இந்த தலைப்பை வாசித்த உடன் உன் இருதயத்துக்குள் ஒரு நெருடல் உருவாகலாம். ஆம் இது உனக்காகவே எழுதப்பட்டது. பொதுவாக ஆபாச எண்ணங்கள் இருதயத்திலே தோன்றுவதற்கு நம்முடைய உடலில் சுரக்கக் கூடிய ஹார்மோன் தான் காரணம் என்று நாம் நம்புகிற அறிவியலும், நாமும் சொல்லிக்கொள்ளுகிறோம். இது வயதுக் கோளாறு இந்த வயதில் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றத் தான் செய்யும் இதில் பெரிய தவறு ஒன்றும் இல்லை என்று இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் சொல்லுகின்றன. ஆனால் இது உன் உடல் நலமும் உன் எதிர்காலமும் சார்ந்த விஷயம். ஒரு வேளை உன் இருதயத்துக்குள் நீ இவ்வாறு நினைத்துக்கொண்டு இருக்கலாம் எனக்கென்று ஒரு கணவனோ, மனைவியோ வந்த பின்னர் இப்படிப்பட்ட ஆபாச எண்ணங்கள் என் மனதில் தோன்றாது என்று, ஒரு வேளை நீ நினைப்பது சரி என்று எடுத்துக்கொண்டால், இன்றும் செய்தி தாள்களில் திருமணமானவர்களும், வயது முதிர்ந்தோறும் தவறான உறவுகளில் சிக்கி உள்ளதை வாசிக்கிறோமே. உன் இளமை காலத்தை எப்படி செலவிடுகிறாயோ அதை போலவே உன் எதிர்காலமும் இருக்கும். இந்த நாட்களிலே நீ பழகக்கூடிய நல்ல பழக்கவழக்கங்கள் ஆனாலும் சரி, கெட்ட பழக்கவழக்கங்கள் ஆனாலும் சரி அது உன்னை பின் தொடரும் என்பதை மறவாதே.

இந்த ஆபாச படங்களை பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் உன்னில் தோன்ற மூல காரணமாய் இருப்பது தொலைக்காட்சிகளில் தோன்றக்கூடிய காட்சிகளே. அதை நீ பார்த்து உன் இருதயத்திலே அதை இச்சித்து அதன் தொடர்ச்சியாய் நீ pornography என்று சொல்லப்படுகின்ற இந்த ஆபாச படங்களை பார்க்க எத்தனிக்கின்றாய். உன் கரங்களிலே தவழுகிற உன் கைபேசிகள் இதை உனக்கு எளிதாக்குகின்றன. அதை ஒரு முறை பார்க்க முனைகிற நீ அதிலே மூழ்கிப்போகிறாய். எப்பொழுதும் தனிமையை நாடுகிறாய். அந்த தனிமை இன்னும் அதிகமாய் அதற்குள் உன்னை இழுத்து செல்லுகிறது. உன் எண்ணம் எப்பொழுதும் இதை பற்றியே சிந்தித்து கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு உன்னை அடிமைப்படுத்திவிடும். இதன் விளைவு என்ன தெரியுமா,? உன் கண்களினால் பார்க்கிற யாவரையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க நேரிடும். உன் இரத்த சொந்தங்களைக் கூட உன்தாய், தகப்பன், சகோதரன்,

சகோதரி என்று எந்த வரைமுறையும் இல்லாமல் ஆபாச கண்களால் பார்க்க உன் இருதயம் தூண்டும். குற்ற உணர்ச்சிகள் உன்னை குத்த தொடங்கும். உன்னால் உன்னுடைய படிப்பிலோ பணியிலோ கவனம் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவாய். இதன் அதிகபட்ச விளைவு உன்னை தவறான உறவுகளில் ஈடுபட தூண்டும். ஒரே ஒரு முறை நான் திரையிலே கண்டதை செய்து பார்த்தால் என்ன என்கிற எண்ணம் உருவாகும்

கண்ணால் பார்த்து , பார்த்ததை ரசித்து , ரசித்ததை ருசிக்க தூண்டும் வயது இது. கண்ணால் கண்டதை சொந்தமாக்கிக்கொள்ள உன் இருதயம் துடிக்கும். அதை அடைவதற்காய் எந்த எல்லைக்கும் செல்ல துணிவாய். ஏற்ற சமயம் வாய்க்கும் போது இப்படிப்பட்ட தவறான உறவுகளில் ஈடுபட உன்னை உன் இருதயம் தூண்டும். அதற்க்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க முயல்வாய். ஒரு குறிப்பிட்ட காலத்திலே உன் இருதயத்தின் எண்ணங்களை உன்னால் அடக்க முடியாமல் போகும். தவறான பழக்கவழக்கங்களுக்கு நேராய் உன்னை நடத்தும் உன் உடல் நலத்தை சீரழிக்க கூடிய சில பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட நேரிடும். உன் மனம் நினைக்கிறதை சரியா தவறா என்று ஆராயாமல் செயல்பட ஆரம்பிப்பாய். மனம் போன போக்கிலே வாழ தொடங்குவாய். யாருக்கும் தெரியாது என்று நான்கு சுவற்றுக்குள்ளே நீ செய்கிற காரியம் உன் உடல் நலத்தையும் உன் எதிர் காலத்தையும் சீரழித்துவிடும் என்பது நிதர்சனம். நான் செய்கிற இந்த ரகசிய தவறுகள் வேறு யாருக்கும் தெரிந்து விடுமோ என்கிற பயம் உன்னை ஆட்டி படைக்கும்.

ஒரு வேளை உன் நண்பர்களுக்கோ உன் குடும்பத்தினர்க்கோ நீ செய்கிற இந்த அந்தரங்க தவறுகள் தெரிய வந்தால் வெட்கமும் அவமானமும் உன்னை கவ்விக்கொள்ளும். படிக்க வேண்டிய, கடுமையாய் உழைக்க வேண்டிய இந்த இளமை பருவத்திலே படிக்காமல் உழைக்காமல் உன் இளமையை வீணடித்து காலம் கடந்து போன பின்னர் சிந்தித்து பயன் ஒன்றும் இல்லை. படிக்கின்ற வயதில் சரியாக படிக்காத காரணத்தால் படிப்பில் தோல்வி அடைந்து உன்னோடு படித்த நண்பர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் போது உன் கடந்த காலத்தை குறித்து சிந்தித்து பார்ப்பாய் ஆனால் காலம் கடந்தது கடந்தது தான். திரும்பப் பெற முடியாது. இதன் பாதிப்பு இதோடு முடிவடைவதில்லை உன் எதிர்கால குடும்ப வாழ்க்கையை கூட சீரழிக்கின்றது. உன் வாலிபத்தின் வீரியத்தை தேவையற்ற இடங்களிலே நீ பயன்படுத்தினதினாலே, நீ பெலனற்றவனாகி உன் வாலிபத்தை உபயோகப்படுத்த வேண்டிய இடத்தில் உபயோகப்படுத்த தவறிப்போவாய். உன் சொந்த வாழ்க்கைத் துணையினிடத்தில் நீ வெட்கத்தோடும் அவமானத்தோடும் உன் வாழ்க்கையை நகர்த்த நேரிடும்.



உன் குடும்ப வாழ்க்கையை நித்தம் நித்தம் வேதனையும் கசப்பும் நிறைந்ததாக்கும். சில நேரங்களில் உன் இருதய பெலவீனத்தின் நிமித்தம் நீ தற்கொலைக்கு நேராய் கூட கடந்து செல்ல நேரிடும். உன் இளம் பிராயத்திலே நீ செய்த அந்தரங்க பாவங்கள் உன்னை ஒரு நாள் வெளிச்சத்தில் கொண்டு வந்து நிறுத்தும் என்பதை மறவதே. நீ ஒளிப்பிடத்தில் செய்தது ஒரு நாள் வெட்ட வெளிச்சத்திற்கு வரும்.

இதை வாசித்துக்கொண்டிருக்கிற அருமையான வாலிப சகோதரனே\ சகோதரியே நீயும் இதைப்போன்ற ஒரு சூழ்நிலையிலே சிக்கி இருக்கலாம். உன் சூழ்நிலையை கூட மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள தயக்கத்துடன் இருக்கலாம். மற்றவர்கள் என்னை பற்றி என்ன நினைப்பார்கள் என்று உனக்கு தோன்றலாம். ஆபாசம் என்னும் வலையிலே சிக்கி இருக்கும் உனக்கு அதில் இருந்து விடுபட முதலாவது நீ உன் பார்வையை காத்துக்கொள்ள வேண்டும். உனக்குள்ளே தவறான உணர்வுகளை தூண்டக்கூடிய எந்த காட்சியையும் பார்ப்பதை தவிர்த்துவிடு. எப்பொழுதும் சோர்வாக இருக்காதே, ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் உன்னை நீ ஈடுபடுத்திக்கொள். அநேக நேரங்களில் நீ உன் பொழுதை வெறுமனே கழிப்பதினாலே உன் எண்ணம் அதை நோக்கி செல்லுகிறது. தவறான சிந்தனையை நோக்கி உன்னை அழைத்து செல்லும் தேவை இல்லாத உறவுகளை நண்பர்களை உதறி தள்ளிவிடு. தவறான உறவுகளில் சிக்கி இருப்பவனாய் நீ இருப்பாயாகில் அந்த தொடர்பை துண்டித்து விடு, அந்த நபரை பார்ப்பதை கூட தவிர்த்து விடு. எந்த ஒரு அவசியமும் இல்லாமல் வலைதளத்தை பயன்படுத்தாதே. உன் நேரத்தை செலவிடுவதற்கு வலைதளத்தை ஒரு கருவியாக்காதே அது உன்னை மீண்டும் தன் வலையில் வீழ்த்தும். அவசியமானதற்குமட்டும் பயன்படுத்தி பழகு.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக உனக்கு உதவுவதற்கு ஒரு நல்ல நண்பரை அறிமுகப்படுத்துகிறேன். அவர் தான் உன்னையும் என்னையும் உருவாக்கினவர். உன் வாழ்க்கையிலும் உன் எதிர்காலத்திலும் அதிகமான அக்கறைகொண்டவர். உன்னை பற்றி சகலமும் அறிந்தவர். ஆம் நீ செய்த அருவருக்கத்தக்க காரியமும் அவருக்கு தெரியும். ஆனால் இவர் வித்தியாசமானவர் உண்மையாய் உன்னை நேசிக்கிறவர் மற்ற உன் நண்பர்களைப் போல உன் சுயரூபம் வெளிவந்த உடன் உன்னை வெறுப்பவர் இல்லை. அவர் தான் இந்த உலகம் முழுவதையும் உருவாக்கின இயேசு கிறிஸ்து. இந்த ஆபாச எண்ணங்களை பரிசுத்த வேதாகமம் பாவம் என்று வரையறுக்கிறது. நீயும் நானும் செய்த பாவத்திற்காய் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாய் அவர் தன் ஜீவனையே கொடுத்தார். நீயும் நானும் அனுபவிக்க வேண்டிய

தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். நம் கைகளினால் நாம் செய்த பாவத்திற்காய் அவர் கைகளில் ஆணிகள் கடாவப்பட்டது. நம் கால்களினால் செய்த பாவத்திற்காய் அவர் கால்களில் ஆணிகள் கடாவப்பட்டது. நம் சரீரத்தினால் செய்த பாவத்திற்காய் அவர் சரீரம் கிழிக்கப்பட்டது. அந்த இயேசு கிறிஸ்து உன்னை பார்த்து கேட்கிறார் மகனே எனக்காக நீ இந்த பழக்கவழக்கங்களை விடுவயா என்று? உனக்காகவும், எனக்காகவும் தன் ஜீவனையே தந்த அந்த இயேசு கிறிஸ்து தான் மெய்யான தெய்வம்.

அந்த மெய்யான தெய்வம் உன் இருதயத்துக்குள்ளே வந்துவிட்டால் இனி உன் இருதயத்துக்குள்ளே பாவம் ஆளுகை செய்ய முடியாது. ஒரு தகப்பனை போல உன்னை நேசிக்கிற அந்த இயேசு கிறிஸ்து விடம் உன் இளமையை ஒப்புக்கொடுப்பாயா. உன் இருதயத்தில் அவரை நினைத்துக்கொண்டு இந்த பாவ பழக்கவழக்கத்தில் இருந்து விடுதலை பெற விரும்புகிறேன் உதவி செய்யுங்க அப்பானு சொல்லுவாயா. இதை எழுதிக்கொண்டிருக்கிற நான் கூட உன்னை மாதிரியே ஒரு நாள் இப்படிப்பட்ட பாவத்தில் விழுந்து கிடந்தேன். நான் உனக்கு அறிமுகப்படுத்தின இயேசு என் உள்ளத்தில் வந்த பின்னர் நான் விடுதலை பெற்றேன். இப்பொழுது நீயும் இந்த பாவ பழக்கவழக்கத்தில் இருந்து விடுதலை பெற உண்மையாய் அந்த இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் நினைத்துக்கொண்டு பின் வரும் ஜெபத்தை வாசி அவர் உன்னை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார்.

## ஜெபம்:

அன்புள்ள தகப்பனே எனக்காய் நீங்க ஜீவனை தந்தீங்களே அப்பா. இந்த பாவ பழக்கத்தில் இருந்து விடுதலை பெற விரும்புகிறேன் அப்பா. எனக்கு உதவி செய்யுங்க அப்பா. இனி நீங்க விரும்புகிற படி நான்வாழ என்னை அற்பணிக்கின்றேன். நீர் மாத்திரமே மெய்யான தெய்வம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன். ஆமென்.

***


*For Contact*

End time Warriors

Cell: 7667995892

Email-endtimewarriors17@gmail.com


*Diocesan Offset Press, Palayamkottai. Ph : 0462 2573182*

# Pornography

இதை வாசிக்கிற அருமையான சகோதரனே/சகோதரியே இந்த தலைப்பை வாசித்த உடன் உன் இருதயத்துக்குள் ஒரு நெருடல் உருவாகலாம். ஆம் இது உனக்காகவே எழுதப்பட்டது. பொதுவாக ஆபாச எண்ணங்கள் இருதயத்திலே தோன்றுவதற்கு நம்முடைய உடலில் சுரக்கக் கூடிய ஹார்மோன் தான் காரணம் என்று நாம் நம்புகிற அறிவியலும், நாமும் சொல்லிக்கொள்ளுகிறோம். இது வயதுக் கோளாறு இந்த வயதில் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றத் தான் செய்யும் இதில் பெரிய தவறு ஒன்றும் இல்லை என்று இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் சொல்லுகின்றன. ஆனால் இது உன் உடல் நலமும் உன் எதிர்காலமும் சார்ந்த விஷயம். ஒரு வேளை உன் இருதயத்துக்குள் நீ இவ்வாறு நினைத்துக்கொண்டு இருக்கலாம் எனக்கென்று ஒரு கணவனோ, மனைவியோ வந்த பின்னர் இப்படிப்பட்ட ஆபாச எண்ணங்கள் என் மனதில் தோன்றாது என்று, ஒரு வேளை நீ நினைப்பது சரி என்று எடுத்துக்கொண்டால், இன்றும் செய்தி தாள்களில் திருமணமானவர்களும், வயது முதிர்ந்தோறும் தவறான உறவுகளில் சிக்கி உள்ளதை வாசிக்கிறோமே. உன் இளமை காலத்தை எப்படி செலவிடுகிறாயோ அதை போலவே உன் எதிர்காலமும் இருக்கும். இந்த நாட்களிலே நீ பழகக்கூடிய நல்ல பழக்கவழக்கங்கள் ஆனாலும் சரி, கெட்ட பழக்கவழக்கங்கள் ஆனாலும் சரி அது உன்னை பின் தொடரும் என்பதை மறவாதே.

இந்த ஆபாச படங்களை பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் உன்னில் தோன்ற மூல காரணமாய் இருப்பது தொலைக்காட்சிகளில் தோன்றக்கூடிய காட்சிகளே. அதை நீ பார்த்து உன் இருதயத்திலே அதை இச்சித்து அதன் தொடர்ச்சியாய் நீ pornography என்று சொல்லப்படுகின்ற இந்த ஆபாச படங்களை பார்க்க எத்தனிக்கின்றாய். உன் கரங்களிலே தவழுகிற உன் கைபேசிகள் இதை உனக்கு எளித்தாக்குகின்றன. அதை ஒரு முறை பார்க்க முனைகிற நீ அதிலே மூழ்கிப்போகிறாய். எப்பொழுதும் தனிமையை நாடுகிறாய். அந்த தனிமை இன்னும் அதிகமாய் அதற்குள் உன்னை இழுத்து செல்லுகிறது. உன் எண்ணம் எப்பொழுதும் இதை பற்றியே சிந்தித்து கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு உன்னை அடிமைப்படுத்திவிடும். இதன் விளைவு என்ன தெரியுமா,? உன் கண்களினால் பார்க்கிற யாவரையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க நேரிடும். உன் இரத்த சொந்தங்களைக் கூட உன்தாய், தகப்பன், சகோதரன்,

சகோதரி என்று எந்த வரைமுறையும் இல்லாமல் ஆபாச கண்களால் பார்க்க உன் இருதயம் தூண்டும். குற்ற உணர்ச்சிகள் உன்னை குத்த தொடங்கும். உன்னால் உன்னுடைய படிப்பிலோ பணியிலோ கவனம் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவாய். இதன் அதிகபட்ச விளைவு உன்னை தவறான உறவுகளில் ஈடுபட தூண்டும். ஒரே ஒரு முறை நான் திரையிலே கண்டதை செய்து பார்த்தால் என்ன என்கிற எண்ணம் உருவாகும்

கண்ணால் பார்த்து , பார்த்ததை ரசித்து , ரசித்ததை ருசிக்க தூண்டும் வயது இது. கண்ணால் கண்டதை சொந்தமாக்கிக்கொள்ள உன் இருதயம் துடிக்கும். அதை அடைவதற்காய் எந்த எல்லைக்கும் செல்ல துணிவாய். ஏற்ற சமயம் வாய்க்கும் போது இப்படிப்பட்ட தவறான உறவுகளில் ஈடுபட உன்னை உன் இருதயம் தூண்டும். அதற்க்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க முயல்வாய். ஒரு குறிப்பிட்ட காலத்திலே உன் இருதயத்தின் எண்ணங்களை உன்னால் அடக்க முடியாமல் போகும். தவறான பழக்கவழக்கங்களுக்கு நேராய் உன்னை நடத்தும் உன் உடல் நலத்தை சீரழிக்க கூடிய சில பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட நேரிடும். உன் மனம் நினைக்கிறதை சரியா தவறா என்று ஆராயாமல் செயல்பட ஆரம்பிப்பாய். மனம் போன போக்கிலே வாழ தொடங்குவாய். யாருக்கும் தெரியாது என்று நான்கு சுவற்றுக்குள்ளே நீ செய்கிற காரியம் உன் உடல் நலத்தையும் உன் எதிர் காலத்தையும் சீரழித்துவிடும் என்பது நிதர்சனம். நான் செய்கிற இந்த ரகசிய தவறுகள் வேறு யாருக்கும் தெரிந்து விடுமோ என்கிற பயம் உன்னை ஆட்டி படைக்கும்.

ஒரு வேளை உன் நண்பர்களுக்கோ உன் குடும்பத்தினர்க்கோ நீ செய்கிற இந்த அந்தரங்க தவறுகள் தெரிய வந்தால் வெட்கமும் அவமானமும் உன்னை கவ்விக்கொள்ளும். படிக்க வேண்டிய, கடுமையாய் உழைக்க வேண்டிய இந்த இளமை பருவத்திலே படிக்காமல் உழைக்காமல் உன் இளமையை வீணடித்து காலம் கடந்து போன பின்னர் சிந்தித்து பயன் ஒன்றும் இல்லை. படிக்கின்ற வயதில் சரியாக படிக்காத காரணத்தால் படிப்பில் தோல்வி அடைந்து உன்னோடு படித்த நண்பர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் போது உன் கடந்த காலத்தை குறித்து சிந்தித்து பார்ப்பாய் ஆனால் காலம் கடந்தது கடந்தது தான். திரும்பப் பெற முடியாது. இதன் பாதிப்பு இதோடு முடிவடைவதில்லை உன் எதிர்கால குடும்ப வாழ்க்கையை கூட சீரழிக்கின்றது. உன் வாலிபத்தின் வீரியத்தை தேவையற்ற இடங்களிலே நீ பயன்படுத்தினதினாலே, நீ பெலனற்றவனாகி உன் வாலிபத்தை உபயோகப்படுத்த வேண்டிய இடத்தில் உபயோகப்படுத்த தவறிப்போவாய். உன் சொந்த வாழ்க்கைத் துணையினிடத்தில் நீ வெட்கத்தோடும் அவமானத்தோடும் உன் வாழ்க்கையை நகர்த்த நேரிடும்.



உன் குடும்ப வாழ்க்கையை நித்தம் நித்தம் வேதனையும் கசப்பும் நிறைந்ததாக்கும். சில நேரங்களில் உன் இருதய பெலவீனத்தின் நிமித்தம் நீ தற்கொலைக்கு நேராய் கூட கடந்து செல்ல நேரிடும். உன் இளம் பிராயத்திலே நீ செய்த அந்தரங்க பாவங்கள் உன்னை ஒரு நாள் வெளிச்சத்தில் கொண்டு வந்து நிறுத்தும் என்பதை மறவதே. நீ ஒளிப்பிடத்தில் செய்தது ஒரு நாள் வெட்ட வெளிச்சத்திற்கு வரும்.

இதை வாசித்துக்கொண்டிருக்கிற அருமையான வாலிப சகோதரனே\ சகோதரியே நீயும் இதைப்போன்ற ஒரு சூழ்நிலையிலே சிக்கி இருக்கலாம். உன் சூழ்நிலையை கூட மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள தயக்கத்துடன் இருக்கலாம். மற்றவர்கள் என்னை பற்றி என்ன நினைப்பார்கள் என்று உனக்கு தோன்றலாம். ஆபாசம் என்னும் வலையிலே சிக்கி இருக்கும் உனக்கு அதில் இருந்து விடுபட முதலாவது நீ உன் பார்வையை காத்துக்கொள்ள வேண்டும். உனக்குள்ளே தவறான உணர்வுகளை தூண்டக்கூடிய எந்த காட்சியையும் பார்ப்பதை தவிர்த்துவிடு. எப்பொழுதும் சோர்வாக இருக்காதே, ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் உன்னை நீ ஈடுபடுத்திக்கொள். அநேக நேரங்களில் நீ உன் பொழுதை வெறுமனே கழிப்பதினாலே உன் எண்ணம் அதை நோக்கி செல்லுகிறது. தவறான சிந்தனையை நோக்கி உன்னை அழைத்து செல்லும் தேவை இல்லாத உறவுகளை நண்பர்களை உதறி தள்ளிவிடு. தவறான உறவுகளில் சிக்கி இருப்பவனாய் நீ இருப்பாயாகில் அந்த தொடர்பை துண்டித்து விடு, அந்த நபரை பார்ப்பதை கூட தவிர்த்து விடு. எந்த ஒரு அவசியமும் இல்லாமல் வலைதளத்தை பயன்படுத்தாதே. உன் நேரத்தை செலவிடுவதற்கு வலைதளத்தை ஒரு கருவியாக்காதே அது உன்னை மீண்டும் தன் வலையில் வீழ்த்தும். அவசியமானதற்குமட்டும் பயன்படுத்தி பழகு.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக உனக்கு உதவுவதற்கு ஒரு நல்ல நண்பரை அறிமுகப்படுத்துகிறேன். அவர் தான் உன்னையும் என்னையும் உருவாக்கினவர். உன் வாழ்க்கையிலும் உன் எதிர்காலத்திலும் அதிகமான அக்கறைகொண்டவர். உன்னை பற்றி சகலமும் அறிந்தவர். ஆம் நீ செய்த அருவருக்கத்தக்க காரியமும் அவருக்கு தெரியும். ஆனால் இவர் வித்தியாசமானவர் உண்மையாய் உன்னை நேசிக்கிறவர் மற்ற உன் நண்பர்களைப் போல உன் சுயரூபம் வெளிவந்த உடன் உன்னை வெறுப்பவர் இல்லை. அவர் தான் இந்த உலகம் முழுவதையும் உருவாக்கின இயேசு கிறிஸ்து. இந்த ஆபாச எண்ணங்களை பரிசுத்த வேதாகமம் பாவம் என்று வரையறுக்கிறது. நீயும் நானும் செய்த பாவத்திற்காய் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாய் அவர் தன் ஜீவனையே கொடுத்தார். நீயும் நானும் அனுபவிக்க வேண்டிய